செ.வெ.எண்: 44 நாள்: 18.11.2019

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவா் அலுவலகத்தில் மக்கள் குறைதீா்க்கும் கூட்டம் கூடுதல் ஆட்சியா் திரு.விஷ்ணு சந்திரன், இ.ஆ.ப., அவா்கள் தலைமையில் நடைபெற்றது.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவா் அலுவலகத்தில் மக்கள் குறைதீா்க்கும் கூட்டம் கூடுதல் ஆட்சியா் திரு.விஷ்ணு சந்திரன், இ.ஆ.ப., அவா்கள் தலைமையில் இன்று (18.11.2019) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கூடுதல் ஆட்சியா் அவா்கள், முதியோா் உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, பட்டா பெயா் மாற்றம், கல்விக்கடன், தொழிற்கடன் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வேண்டிய கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை, பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்டாா். மேலும், மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை சாா்ந்த அலுவலா்களுக்கு அறிவுறுத்தினாா்கள்.

முன்னதாக, கூடுதல் ஆட்சியா் அவா்கள், மாற்றுத்திறனாளிகளின் இருப்பிடங்களுக்கு சென்று கோரிக்கை மனுக்களை பெற்று மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலரிடம் இக்கோரிக்கைகள் குறித்து விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டாா்.

இந்நிகழ்ச்சியில், தூத்துக்குடி சாா் ஆட்சியா் திரு.சிம்ரோன் ஜித் சிங் காலோன், இ.ஆ.ப., சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியா் திரு.சங்கரநாராயணன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலா் திரு.சிவசங்கரன் மற்றும் அலுவலா்கள் கலந்து கொண்டனா்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடா்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.